மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பற்றியது. ஆகையால் உறுப்பினர் திரு. பூபதி அவர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தைக் குறித்து மட்டும் துணைக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, உணவு இல்லாமல் மக்கள் இறந்த சரித்திரம் இருக்கிறது. ஆனால் சர்க்கரை இல்லாமல் மக்கள் இறந்த தாகச் சரித்திரம் இல்லை. நமது மாநிலம் உணவைப் பொறுத்த வரையில் பற்றுக்குறை மாநிலமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பற்றுக் குறை நிலையை மாற்றுகிற வகையில் இந்த கரும்பு உற்பத்தியைக் குறைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கரும்பு உற்பத்தியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமா என்ற அந்தக் கேள்வி, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எழவில்லை. அது தனிப் பிரச்சினை. சர்க்கரை வினியோகத்திற்கும் கரும்புப் பயிருக்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லை. அதே மாதிரியாக, நெல், மற்ற உணவு தானியங்கள் உற்பத்திக்கும் கரும்பு பயிரிடுவதற்கு கொஞ்சமும் சம்பந்தம் இல்லை. நான் ஏற்கெனவே பதில் சொன்னேன், கரும்பு விளைச்சலினாலோ அல்லது வேறு காரியத்தினாலோ இதெல்லாம் ஏற்படவில்லை. வேண்டு மென்றே அரசியல் காரணத்திற்காக, திரித்துக் கூறுவதற்காக, "கரும்பு வேண்டாம், கரும்பு வேண்டாம்" என்று சொன்னார்கள் அதைக் குறித்துப் பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்தி விட்டார் கள். இரண்டு பக்கங்களிலும் இந்த விவாதம் இல்லாமல், அரிசி உற்பத்தி யையும் பெருக்கவேண்டும், சர்க்கரை உற்பத்தியையும் பெருக்கவேண்டும். கரும்பு நன்றாகப் பயிரிடப்பட வேண்டும். இந்த வகையில் நாம் திட்டமிடுவது தான் இந்த மாநிலத்தினுடைய நல்வாழ்வுக்கும் மேம் பாட்டுக்கும் பாடுபடுவதற்குரிய செயலாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது மணி 10-30-க்கு மேல் ஆகிவிட்டது. வினா-விடை நேரம் இத்துடன் முடிவடைகிறது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. அறிவிப்புகள்.

(அ) தொழில்கள் வாரியத்திற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதிக் கோரிக்கை மீது விவாதத்தை எடுத்துக் கொள்ளுவதற்கு முன்னால் ஓர் அறிவிப்பு உள்ளது.

தொழில்கள் வாரியத்தின் (Board of Industries) தேர்தலுக்காக இருவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையை ஒத்திருப்பதால், அதாவது இரண்டாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். முருகையன், திரு. கோ. பூவராகன் ஆகிய இரு வேட்பாளர்களும் தொழில் வாரியத்துக்கு (Board of Industries) முறைப்படி. தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள் என்று நான் இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

3. அரசினர் தீர்மானங்கள்.

(அ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் (லீடர் ஆஃப் தி ஹவுஸ்) இந்தக் கோரிக்கைகளினுடைய வரிசையை மாற்றியமைப்பதைக் குறித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

1967 ஜூன் 29]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "7—7—1967–ஆம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண் XVI—வேளாண்மை, எண் XVII மீன்வளம், எண XVIII—விலங்கின வளர்ப்பு, எண் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு, எண் XXXV—காட்டு வளத் துறை, எண் XXI—சின்கோனு, எண் XLIV—காட்டுவள மூலதனச் செலவு 14—7—1967–ஆம் நாளன்றும், 14—7—1967-ஆம் நாளான்று எடுத்துக் கொள்ளப்படவேண்டிய மானியக் கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் 7—7—1967–ஆம் நாளன்றும் மாற்றி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் " என்று நான் கோருகிறேன்.

தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நிதிக் கோரிக்கைகளைப் பொறுத்த வரையில், 12·30 வரையில் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவுத் துறை ஆகிய மூன்று கோரிக்கைகளையும்,பிறகு "கூட்டுறவு" கோரிக்கையையும் எடுத்துக் கொள்ளலாம். இதைக் குறித்த ஒரு தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

(இ) பேரவை அலுவல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் எண் X–நீதி நிர்வாகம், எண் XI–சிறைச்சாலைகள், எண் V–பத்திரப் பதிவுத் துறை ஆகியவைகளை ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், இவ் விவாதத்திற்கு 12·30 மணி வரை காலம் ஒதுக்க வேண்டும் என்றும், சட்டப் பேரவை விதி 21, உட்பிரிவு 3–இன் கீழ் நான் கோருகின்றேன்.

தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. 1967–68-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி.)

(அ) கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் " நீதி நிர்வாகம்" பற்றிய நிதிக் கோரிக்கையைக் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,98,31,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையொட்டிய வெட்டுத் தீர்மானங்களை அந்தந்த உறுப்பினர்கள் இப்பொழுது முன்மொழிவார்கள். வழிமொழியத் தேவை இல்லை.

திரு. க. ர. நல்லசிவம்: "கொள்கை பற்றி விவாதிக்க" என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

" கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."